**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:– திருமதி. G. கலைவாணி, பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

2024–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12–ம் நாள் வியாழக்கிழமை
2055 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ குரோதி வருடம் கார்த்திகை மாதம் 27-ம் நாள் வியாழக்கிழமை

இடை நிலை மனு எண்.01/2019

இன்

அசல் வழக்கு எண். 283/2014

1. வளர்மதி
2. வெங்கட்ராமன்
3. கவிதா ... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிராக//

1. திருவேங்கடம் (இறப்பு)
2. பாலமுருகன்
3. ராம்குமார்
4. கலைவாணி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 12.12.2024–ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. C. குணசேகரன், அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4 எதிர்மனுதாரர்கள் அழைப்பாணையின் பேரில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக உத்தரவிடப்பட்டும், 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. வடிவேல் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்றப்

பரிசீலனையில் இருந்ததுமான இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்களுக்கு எதிராக 05.08.2019-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் பேரில் தள்ளுபடி செய்யப்பட்ட தாவாவினை மீண்டும் விசாரணைக்கு எடுத்து உத்தரவு செய்யக் கோரி மனுதாரரால் கட்டளை 09 விதி 09 சட்டப் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்**

(2-1) தான் மேற்படி மனுவில் மனுதாரர், மேற்படி அசல் வழக்கில் 2-ம் பிரதிவாதி என்றும், 1, 3 வாதிகளுக்காகவும் இந்த பிரமாணப்பத்திரத்தை தாக்கல் செய்கிறேன் என்றும்,

(2-2) மேற்படி வழக்கினை பாகத்திற்காகவும், நிரந்தர தடை உத்தரவுக்காகவும் தாக்கல் செய்துள்ளோம் என்றும், மேற்படி வழக்கில் தன்னை குறுக்கு விசாரணை செய்வதற்காக வேண்டி கடந்த 05.08.2019-ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டு இருந்தது என்றும், அன்றைய தினம் தான் நீதிமன்றத்திற்கு வருவதற்காக புறப்பட்டு இருந்தபோது தனக்கு தலை சுற்றல் ஏற்பட்டு அதனால் உயர் ரத்த அழுத்தம் உண்டாகி தனக்கு உடல் நிலை சரியில்லாமல் போய்விட்டது என்றும், தான் உடனே தனது உறவினருடன் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், அதன்பிறகு அன்று மாலை தனது வழக்கறிஞரை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது தான் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்ற விவரம் தனக்கு தெரியவந்தது என்றும், மேற்படி தேதியில் தான் நீதிமன்றத்தில்

ஆஜராகாமல் போனது வேண்டும் என்றே ஏற்பட்டது அல்ல என்றும், தான் மேற்படி வழக்கினை நடத்த தயாராக உள்ளேன் என்றும், தனது தரப்பில் நல்ல வழக்கு நிலையும் உள்ளது என்றும், ஆகையால் கடந்த 05.08.2019-ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்ட தாவாவினை மீண்டும் விசாரணைக்கு எடுத்து உத்தரவு செய்ய வேண்டும் என்று மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

3. இம்மனுவில் 1, 2, 4 எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு போதுமான சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டும், 1, 2, 4 எதிர்மனுதாரர்கள் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் கீழ்கண்டவாறு எதிருரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**4. 3-ம் எதிர்மனுதாரரின் எதிருரை சுருக்கம்:**

(4-1) வாதியின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கில் சொல்லப்பட்டுள்ள பல்வேறு விவரங்களை வாதியே நிரூபிக்க வேண்டும் என்றும், இந்த 3-ம் எதிர்மனுதாரர் / 3-ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்படாத சங்கதிகள் அனைத்தையும் வாதியே நிரூபிக்க வேண்டும் என்றும், வாதியின் மனு பொய்யும், புரட்டுமானது முதல் நிலையிலேயே தள்ளுபடி செய்யத்தக்கதாகும் என்றும், இந்த 3-ம் எதிர்மனுதாரர் / 3-ம் பிரதிவாதி எதிருரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத்தவிர மற்ற அனைத்தையும் வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும்,

(4-2) மேற்படி 3-ம் எதிர்மனுதாரர் / 3-ம் பிரதிவாதி சமர்ப்பிப்பது யாதெனின் பகுதி 2-ல் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும், மேற்படி சங்கதிகளாவன மேற்படி வழக்கினை பாகத்திற்காகவும், நிரந்தர தடை உத்தரவுக்காகவும் தாக்கல்

செய்துள்ளோம் என்றும், மேற்படி வழக்கில் தன்னை குறுக்கு விசாரணை செய்வதாக வேண்டி கடந்த 05.10.2019–ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டு இருந்தது என்றும், அன்றைய தினம் தான் நீதிமன்றத்திற்கு வருவதற்கு புறப்பட்டு இருந்த போது தனக்கு தலை சுற்றல் ஏற்பட்டு அதனால் உயர்ந்த ரத்த அழுத்தம் உண்டாகி, தனக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது என்றும், தான் உடனே தனது உறவினருடன் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், அதன் பிறகு அன்று மாலை தனது வழக்கறிஞரை அவரது அலுவலகத்தில் சந்தித்த போது தான் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்ற விவரம் தனக்கு தெரிய வந்தது என்றும், மேற்படி தேதியில் தான் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் போனது வேண்டும் என்றே ஏற்பட்டது அல்ல என்றும், தான் மேற்படி வழக்கினை நடத்த தயாராக உள்ளேன் என்றும், தனது தரப்பில் நல்ல வழக்கு நிலையும் உள்ளது என்றும்,

(4–3) மேற்படி மனுதாரர் / வாதி அசல் வழக்கு எண்.283/2014 தாக்கல் செய்யப்பட்டு 05.08.2019–ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டு மேற்படி 14.10.2019–ம் தேதியில் மேற்படி மனுதாரர் / வாதி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 09 விதிமுறை 09–ன் படி மனு இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு உள்ள தேதி 30 நாட்களுக்கு மேலாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால் கட்டளை 09, விதிமுறை 09 மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்றும், காலவரைமுறை சட்டப்படி தள்ளுபடி செய்ய வேண்டியது தேவையும், நியாயமும் என்றும், ஆகையால் மேற்படி மனுவானது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு 3–ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் தெரிவித்துள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்**

மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்ட தாவாவை மீண்டும் விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்று கோரும் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6. <u>தீர்வு:</u>

(6–1) மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. மேற்படி வழக்கினை பாகத்திற்காகவும், நிரந்தர தடை உத்தரவுக்காகவும் தாக்கல் செய்துள்ளோம் என்றும், மேற்படி வழக்கில் தன்னை குறுக்கு விசாரணை செய்வதற்காக வேண்டி கடந்த 05.08.2019–ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டு இருந்தது என்றும், அன்றைய தினம் தான் நீதிமன்றத்திற்கு வருவதற்காக புறப்பட்டு இருந்தபோது தனக்கு தலை சுற்றல் ஏற்பட்டு அதனால் உயர்ரத்த அழுத்தம் உண்டாகி தனக்கு உடல் நிலை சரியில்லாமல் போய்விட்டது என்றும், தான் உடனே தனது உறவினருடன் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், அதன்பிறகு அன்று மாலை தனது வழக்கறிஞரை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது தான் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்ற விவரம் தனக்கு தெரியவந்தது என்றும், மேற்படி தேதியில் தான் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் போனது வேண்டும் என்றே ஏற்பட்டது அல்ல என்றும், தான் மேற்படி வழக்கினை நடத்த தயாராக உள்ளேன் என்றும், தனது தரப்பில்

நல்ல வழக்கு நிலையும் உள்ளது என்றும், ஆகையால் கடந்த 05.08.2019–ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்ட தாவாவினை மீண்டும் விசாரணைக்கு எடுத்து உத்தரவு செய்ய வேண்டும் என்று மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். ஆனால் 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுவானது 14.10.2019 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி உத்தரவு தேதியில் இருந்து 30 நாட்களுக்கு பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்ட காரணத்தினால் காலவரையறைச் சட்டப்படி தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி எதிருரை தாக்கல் செய்துள்ளார். இம்மனுவை பரிசீலிக்கும் போது மனுவானது முதலில் 03.09.2019 அன்று தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் மனுவில் குறைகள் இருப்பதாக கூறி திருப்பப்பட்டு மீண்டும் மனுதாரரால் 14.10.2019 அன்று குறைபாடுகளை சரி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே, மேற்படி இம்மனுவானது காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 05.08.2019 அன்று உயர் ரத்த அழுத்தம் காரணமாக மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாக மனுதாரரால் தனது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி மனு சங்கதிக்கு ஆதரவாக சாட்சிகளோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருந்தபோதிலும் மேற்படி வழக்கானது இம்மனுதாரர் / வாதியால் எதிர்மனுதாரர் / பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும், பாக பத்திர ஆவண எண்.161/12–ஐ செல்லாது என்று விளம்புகை செய்யக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், மேற்படி அசல் வழக்கில் இம்மனுதாரர் / வாதி 17.07.2019 அன்று விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக 24.07.2019 அன்று வாய்தா போடப்பட்டு அன்றைய தினம் வாதி

ஆஜராகியும் குறுக்கு விசாரணைக்காக பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க 05.08.2019 அன்று வாய்தா போடப்பட்டதும், 05.08.2019 அன்றைய தினம் வாதி ஆஜராகாததால் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதும் வழக்கு கோப்பில் இருந்து தெரிய வருகிறது. இந்நிலையில் வழக்கு சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், வழக்கில் இருதரப்பு முழு விசாரணைக்கு பிறகு வழங்கப்படும் தீர்ப்பே சரியானதாகவும், இயற்கை நீதி கோட்பாட்டிற்கு உட்பட்டதாகவும் இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் கருதுவதால் மேற்படி இம்மனுவை செலவுத் தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனுவின் மனுதாரர் 3–ம் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/– செலவுத் தொகையாக வருகின்ற 19.12.2024–ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. அழைக்க 19.12.2024.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக உரைக்கப்பட்டு அவரால் கணிணியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 12.12.2024–ம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஓம்/- திருமதி. G. கலைவாணி, பி.ஏ. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் இருதரப்பு சான்றாவணங்கள்</u>:

இல்லை

ஓம்/- திருமதி. G. கலைவாணி, பி.ஏ. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.